# ஜனவரி – 23 – புதன்

## புனித வின்சன்ட்

**“ஓய்வு நாளில் நன்மை செய்வதா அல்லது தீமை செய்வதா? உயிரைக்காப்பதா அழிப்பதா எது முறை?” மாற்.3:4**

## முதல் வாசகம் : எபிரேயர் 7 : 1 – 3, 15 – 17

சகோதரர் சகோதரிகளே, இந்த மெல்கிசதேக்கு சாலேம் நகரின் அரசர் உன்னத கடவுளின் குரு. இவர் அரசர்களை முறியடித்துத் திரும்பியபொழுது ஆபிரகாமை எதிர்கொண்டு போய் அவருக்கு ஆசி அளித்தார். ஆபிரகாம் தம்மிடமிருந்த எல்லாவற்றிலிருந்தும் பத்தில் ஒரு பங்கை இவருக்குக் கொடுத்தார். நீதியின் அரசர் என்பது இவர் பெயரின் முதற்பொருள். மேலும், இவர் சாலேமின் அரசர். அமைதியின் அரசர் என்பது இதற்குப் பொருள். இவருக்குத் தந்தை இல்லை, தாய் இல்லை தலைமுறை வரலாறு இல்லை இவரது வாழ்நாளுக்குத் தொடக்கமும் இல்லை முடிவும் இல்லை. இவர் கடவுளின் மகனுக்கு ஒப்பானவர் குருவாக என்றும் நிலைத்திருப்பவர். மெல்கிசதேக்குக்கு ஒப்பான வேறொரு குரு தோன்றியிருப்பதால் நாம் மேற்கூறியது இன்னும் அதிகத் தெளிவாகிறது. இவர் திருச்சட்டத்தின் கட்டளைப்படி மனித இயல்புக்கு ஏற்ப அல்ல, அழியாத வாழ்வின் வல்லமையால் குருவாகத் தோன்றினார். இவரைப் பற்றி, ”மெல்கிசதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே” என்னும் சான்று உரைக்கப்பட்டுள்ளது.

**பதில்பாடல் :** மெல்கிசதேத்தின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே.

## நற்செய்தி : மாற்கு 3 : 1 - 6

அக்காலத்தில் இயேசு மீண்டும் தொழுகைக்கூடத்திற்குள் சென்றார். அங்கே கை சூம்பியவர் ஒருவர் இருந்தார். சிலர் இயேசுமீது குற்றம் சுமத்தும் நோக்குடன், ஓய்வுநாளில் அவர் அவரைக் குணப்படுத்துவாரா என்று கூர்ந்து கவனித்துக்கொண்டே இருந்தனர். இயேசு கை சூம்பிவரை நோக்கி, ”எழுந்து, நடுவே நில்லும்” என்றார். பின்பு அவர்களிடம், ”ஓய்வுநாளில் நன்மை செய்வதா, தீமை செய்வதா? உயிரைக் காப்பதா, அழிப்பதா? எது முறை?” என்று அவர் கேட்டார். அவர்களோ பேசாதிருந்தார்கள். அவர் சினத்துடன் அவர்களைச் சுற்றிலும் திரும்பிப் பார்த்து, அவர்களது பிடிவாத உள்ளத்தைக் கண்டு வருந்தி, கை சூம்பியவரை நோக்கி, ”கையை நீட்டும்” என்றார். அவர் நீட்டினார். அவருடைய கை மீண்டும் நலமடைந்தது. உடனே பரிசேயர் வெளியேறி ஏரோதியரோடு சேர்ந்து இயேசுவை எப்படி ஒழிக்கலாம் என அவருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தனர்.

**தியானம்:** ஓய்வு நாளும் மானிட மகனுக்கு கட்டுப்பட்டதே” என்று கடவுள் ஒருவர்தான் கூறமுடியும். கடவுளின் வாக்குறுதிகளில் மாபெரும் வாக்குறுதிதான் எம்மை அவர் நிபந்தனையேதுமில்லாது அன்பு செய்கிறேன் என்பது. எமது பெலவீனங்கள், மீறுதல்களிலும் கூட கடவுள் எங்களை அன்பு செய்கின்றவராக இருக்கிறார். இன்றைய நற்செய்தியில் மீண்டும் ஓய்வுநாளில் கை கூம்பியவரை குணப்படுத்துகிறார். அவ்வாறு உடனடியாக அதுவும் ஓய்வு நாளிலேயே குணமளிக்க வேண்டிய கட்டாயமோ அல்லது அவசியமோ இல்லை. அங்கு இயேசு அவதிப்படும் மக்களை பார்க்கிறாரே தவிர ஓய்வு நாளை அவர் பார்கவில்லை. நல்லது செய்வதற்கு நேரம், காலம் ஏதும் கிடையாது. நல்ல செயலைத் தள்ளிப்போடக் கூடாது. அதை உடனடியாகவே செய்துவிட வேண்டும் என்பதையே கடவுள் எமக்கு உணர்த்துகிறார். எமது இதயங்களிலும் பிடிவாதமே எம் வேதம் என்று நாம் வாழ்வோமேயானால் கடவுளின் வல்லமையை, இரக்கத்தை நாம் பெற்றுக்கொள்ள இயலாது. சமுதாயத்தில் அவதியுறும் மனிதர்களுக்கு உதவாத எந்த இதயமும் இயேசுவுக்கு ஏற்புடைய இதயம் அல்ல.